بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 6:5 ஸஃபர், 1431 பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, Email: suvanam@gmail.com, www.suvanam.com

## கொடுப்பதும், எடுப்பதும் (மஹர் மற்றும் வரதட்சணை)

*- A. ஷம்சாத் - நுங்கம்பாக்கம் - தமிழ்நாடு*

### சுவனப்பாதை மாத இதழ் நடத்திய உலகளாவிய எழுத்துப் புரட்சி போட்டியில் (ஹிஜ்ரி 1430) மூன்றாம் பரிசு பெற்ற கட்டுரை

புகழனைத்தும் விண்ணையும் மண்ணையும் அவற்றிற்கிடையே உள்ளவற்றையும் நம்மையும் படைத்த தூயோனாகிய அல்லாஹ் ஒருவனுக்கே!

**எங்கே அமைதி?**

அல்லாஹ் மனிதர்களுக்கு வழங்கும் எண்ணற்ற அருட்கொடைகளில் மிகவும் சிறந்ததும், அனைவரும் விரும்புவதும் 'அமைதி' என்று சொன்னால் அது மிகையாகாது. காசு கொடுத்து வாங்க முடியாத பொருள் அது. மற்றவர்களை விடுங்கள், அமைதி மார்க்கமாகிய இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றக்கூடிய நம் சமுதாயத்தில் அமைதி இருக்கிறதா? இலட்சங்கள் அலட்சியமாகப் பறக்கும் ஆடம்பரத் திருமணங்கள் மணல் வீடாகக் கலைந்து போகும் அவலம் தினந்தோறும் நடக்கின்றன. இது ஒரு சமுதாயத்தின் அமைதியைக் குறிக்கிறதா? இல்லை! அலங்கோலத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. குடும்ப அமைப்பு சீர்குலைந்தால் மொத்த சமுதாயமுமே சீர் குலைந்து போகும். பின் எங்கே நிம்மதி? இந்நிலைக்குப் புற அம்சங்களைக் காரணம் காட்டாமல் நம் தாழ்வுக்கு நாமே காரணம் என்ற பொறுப்புணர்வுடன் எங்கே தவறினோம் நாம்? என்ற சுய அலசலிலும் இந்நிலையை எப்படி சரி செய்வது என்ற ஆரோக்கியமான அணுகுமுறையிலுமே ஈடேற்றம் பெற முடியும்.

**திருமணம் தீனில் ஒரு பகுதி**

திருமணம் என்பது ஒவ்வொரு மனிதனில்

*தொடர்ச்சி 6 ம் பக்கம் பார்க்க ...*

### உள்ளே!

பொறாமை - 3

சமூக சீரழிவுகள் - 4

இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 8

இனிய மாலைப் பொழுதினிலே... - 10

இறை நினைவுகள் - 12

அறிவுப் போட்டி - 12

## உணவளிப்பதும் உடை வழங்குவதும் கணவனின் பொறுப்பே!

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

கணவன் மனைவிக்கு செய்யும் கடமைகள் பற்றி சென்ற இதழில் படித்தீர்கள். இத்தொடரிலும் அதன் தொடரை பார்ப்போம். கணவன் மனைவிக்கு செய்யும் கடமைகளில் ஒன்றுதான் உணவு மற்றும் உடை வழங்குவதாகும். மனைவிக்கும் தன் பிள்ளைகளுக்கும் போதுமான செலவை கணவன் வழங்கவில்லையானால் கணவனின் பணத்திலிருந்து அவரிடத்தில் அனுமதி பெறாமலேயே தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் தேவையான அளவு எடுப்பதற்கு மனைவிக்கு அனுமதி உண்டு. இந்த அளவிற்கு இஸ்லாம் இக்கடமையை வலியுறுத்துகின்றது. பின்வரும் ஹதீது அதை தெளிவுபடுத்துகின்றது.

**இதுபற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது**

1. தக்க வசதியுடையவர்கள், தம் வசதிக்கேற்ப (இவ்விஷயத்தில்) செலவு செய்து கொள்ளவும், ஆனால், எவர் மீது அவருடைய உணவு (வசதி) நெருக்கடியாக்கப்பட்டுள்ளதோ, அவர் தமக்கு அல்லாஹ் கொடுத்ததிலிருந்து செலவு செய்து கொள்ளவும், எந்த ஆத்மாவையும் அல்லாஹ் அதற்குக் கொடுத்திருப்பதேயல்லாமல் (மிகையாக செலவு செய்யும்படி) சிரமப்படுத்த மாட்டான், கஷ்டத்திற்குப் பின்னர், அல்லாஹ் அதி சீக்கரத்தில் இலகுவை (சுகத்தை) உண்டாக்கியருள்வான். (அல்குர்ஆன் 65:7)

2. ...கணவர்களுக்குப் பெண்களிடம் இருக்கும் உரிமைகள் போன்று, முறைப்படி அவர்கள்மீது பெண்களுக்கும் உரிமையுண்டு... (அல்குர்ஆன் 2:228)

இதுபற்றி நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்

1. அபூ ஸுஃப்யான்(ரலி) அவர்களின் மனைவி ஹின்த் பின்த் உத்பா(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! அபூ சுப்யான் (என் கணவர்)அவரிடமிருந்து நான் அவருக்கு தெரியாமல் அவரின் பணத்திலிருந்து எடுத்தாலே தவிர எனக்கும் என் பிள்ளைகளுக்கும் போதுமான அளவிற்கு அவர் பணம் கொடுப்பதில்லை, நான் அவ்வாறு எடுப்பது என்மீது குற்றமா எனக்கேட்டார்கள். உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் போதுமானளவு உரிய முறையில் எடுப்பதில் தவறில்லை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்).

2. உன் மனைவியின் வாயிலிடும் (ஒரு கவள உணவு) உட்பட அல்லாஹ்விற்காக நீ செய்யும் ஒவ்வொன்றுக்கும் கூலி கொடுக்கப்படாமல் இருப்பதில்லை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி)

3. அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யும் தங்கக் காசைவிடவும், ஒரு மிஸ்கீனுக்கு செலவு செய்யும் தங்கக்காசைவிடவும், ஒரு அடிமையை உரிமையிடுதலில் செலவு செய்யும் தங்கக்காசை விடவும் உன் குடும்பத்திற்காக செலவு செய்யும் தங்கக்காசே அல்லாஹ்விடத்தில் அதிக நன்மைக்குரியதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

4. அல்லாஹ் யாருக்கு செல்வத்தை வழங்கி பின்பு தன் குடும்பத்தின் மீது எவர் சரிவர செலவு செய்யவில்லையோ அவர் நம்மைச்சாந்தவரல்ல என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஜாமிஉஸ்ஸகீர்)

5. தன் குடும்பத்தை கவனிக்காமல் பாழாக்கி விடுவது பெரும்பாவமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத்)

மனைவிக்கு உணவு மட்டுமல்ல உடை வழங்குவதும் கடமைதான் என்பதை பின்வரும் ஹதீது தெளிவுபடுத்துகின்றது.

6. பெண்கள் விஷயத்தில் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள், அல்லாஹ்வின் அமானிதத்தில் அவர்களை நீங்கள் எடுத்துள்ளீர்கள். அல்லாஹ்வின் வார்த்தையைக் கொண்டு அவர்களின் கற்பை நீங்கள் ஹலாலாக்கிக் கொண்டுள்ளீர்கள். நீங்கள் விரும்பாதவரை உங்களது விரிப்பில் அமரவைக்காமலிருப்பது அவர்கள் உங்களுக்கு செய்யும் கடமையாகும். அவ்வாறு அவர்கள் செய்தால் காயமில்லாத அடியாக அவர்களுக்கு அடியுங்கள். அவர்களுக்கு நல்ல முறையில் உணவளிப்பதும் உடை வழங்குவதும் உங்கள் மீதுள்ள கடமையாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

7. அல்லாஹ்வின் தூதரே! எங்களின் மனைவிமாருக்கு நாங்கள் செய்யவேண்டிய கடமை என்ன என நான் நபி(ஸல்) அவர்களிடத்தில் கேட்டேன். நீ உண்ணும் போது அவளுக்கு உண்ணக்கொடுப்பதும் நீ ஆடை அணியும் போது அவளுக்கு ஆடை அணிவிப்பதும் இன்னும் அவளின் முகத்தில் நீர் அடிக்கக்கூடாது, அவளை இழிவுபடுத்தக்கூடாது வீட்டிலன்றி அவளை கண்டிக்கவும் கூடாது என்றார்கள். (அபூதாவூத்) அறிவிப்பவர்: முஆவியா(ரலி)

மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் அனைத்தும் கணவன்தான் மனைவிக்கு செலவு செய்ய வேண்டும் என்பதையும் உணவு மற்றும் உடை வழங்க வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துகின்றது. தான் உண்ணக்கூடிய தரத்திலுள்ள உணவையும் தான் அணியும் தரத்திலுள்ள ஆடையையும் தன் மனைவிக்கு கணவன் வழங்க வேண்டும். இதற்கு மாறாக தான் தரம்கூடிய உணவை உண்டு மனைவிக்கு தரம் குறைந்த உணவை வழங்குவதும் தான் விலை மதிப்புள்ள ஆடைகளை அணிந்து தன் மனைவிக்கு தரம் குறைந்த ஆடைகளை வழங்குவதும் கூடாது. கணவன் தன் வசதிற்கு ஏற்றவாறு செய்துகொண்டால் அது அவருக்கு போதுமானதாகும்.

மனைவிமாரும் தன் கணவன்மாரிடம் அவர்களின் வசதிற்கு அப்பால் தேவைகளை வேண்டக்கூடாது. சில மனைவிமார் தன் தோழிமார்களைப்பார்த்து அவர்கள் வாழ்வது போன்ற ஆடம்பர வாழ்க்கைபோல் என் கணவன் எனக்கு செய்து கொடுக்கவில்லையென்று கணவனால் பல உதவிகளை பெற்றுக் கொண்டிருக்கும் மனைவி அவனுடன் நன்றி மறந்து நடக்கின்றார்கள். இது நரகம் செல்வதற்குரிய காரணம் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

ஒவ்வொரு கணவனும் அவனின் வசதிற்கு ஏற்றவாறுதான் தன் மனைவியருக்கு செலவழிக்க வேண்டும் என்பது அல்லாஹ்வின் கூற்றாகும். அல்லாஹ் எந்த ஒரு ஆத்மாவையும் அதன் சக்திற்கு அப்பால் கஷ்டப்படுத்துவதில்லை.

குறைந்த வருமானமுள்ள கணவருடன் வாழும் மனைவியர் உங்களைவிட தரம் குறைந்த வாழ்க்கை வாழும் சகோதரிகளைப் பார்க்க வேண்டும். அவர்கள் அவர்களின் கணவன்மாருடன் கிடைத்ததை பொருந்திக் கொண்டு வாழுகின்றார்கள். இதைவிடவும் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களின் மனைவிமார்கள் குடிசைகளில் வாழ்க்கை நடத்தினார்கள். அதை முழு மனதோடும் ஏற்றுக்கொண்டார்கள். அன்றாடம் மூன்று நேர உணவை உண்ணாமல் வாழ்ந்தார்கள், பல மாதங்கள் அடுப்பு எரிக்காமல் வாழ்ந்தார்கள் என்று மார்தட்டிப் பேசும் நாம் உல்லாசமாக கணவனின் சம்பாத்தியத்தில் வாழ்ந்து கொண்டு மற்றவரின் ஆடம்பர வாழ்க்கையை கனவு காண்பது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டதாகும். மாறாக நீங்கள் பெற்றிருக்கும் நல்வாழ்விற்காக அல்லாஹ்விற்கும் உங்களின் கணவன்மாருக்கும் நன்றி செலுத்தி அல்லாஹ்வின் அருளையும் உங்களின் கணவன்மாரின் அன்பையும் பொருத்தத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தப் போதுமானவன்.

### பணம் அல்லாத கடமைகள்

மனைவியருடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். மனைவி என்பவள் கணவனின் வாழ்க்கைத் துணைவியாவாள், இதை புரிந்து நடப்பவர்களின் வாழ்க்கை அது ஒரு அலாதியான வாழ்க்கையாகும். இதைப் புரியாதவர்கள்தான் அன்றாடம் பெரும் மன உளைச்சலோடு வாழ்க்கையை கடத்துகின்றார்கள். குறைகள் ஏதும் நடக்காமலிருப்பதற்கு மனைவி என்பவள் ஒரு இயந்திரமல்ல. ஒரு குறை செய்யும் மனைவியிடம் பல நன்மைகள் நிச்சயம் இருக்கத்தான் செய்யும். ஒரு குறைக்காக பல நன்மைகளை மறப்பது நீதமான ஒருவனின் நிலையாக இருக்க முடியாது. நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். எந்த ஒரு முஃமினான ஆணும் ஒரு முஃமினான பெண்ணை வெறுத்துவிடக்கூடாது. அவளிடத்தில் வெறுக்கத்தக்க ஒரு குணத்தை கண்டால் பொருந்திக் கொள்ளக்கூடிய இன்னுமொரு அல்லது வேறு ஒரு குணம் அவளிடத்தில் இருக்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

ஆகவே மனைவியிடம் நல்லொழுக்கத்துடனும் இரக்கத்தன்மையுடனும் விட்டுக்கொடுக்கும் மனப்பாண்புடனும் கணவன் நடந்து கொள்ள வேண்டும். அதனால் அவ்விருவரின் வாழ்க்கையிலும் அவ்விருவரின் சந்ததிகளின் வாழ்க்கையிலும் நல்ல எதிர் காலம் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

மனைவியிடம் தவிர்க்கப்பட வேண்டிய பண்புகள் திருத்தப்படாமல் நீடித்தால் அதைச் சொல்லித் திருத்திப்பார்க்க வேண்டும். அது பயனளிக்கவில்லையென்றால் படுக்கையில் மனைவியை தூரமாக்கி தன் வெறுப்பை வெளிப்படுத்த வேண்டும்.

அதுவும் பயனளிக்கவில்லையென்றால் காயமில்லாத ரோஷத்தை உருவாக்கும் அடியாக அடிக்க வேண்டும். அதுவும் பயனளிக்கவில்லையென்றால் இருவரின் குடும்பத்திலிருந்தும் நலவை விரும்பும் சிலரை வைத்து இருவருக்கும் மத்தியில் சமரச முயற்சியில் ஈடுபடவேண்டும். இவ்வாறுதான் கணவன் மனைவிக்கு மத்தியில் ஏற்படும் பெரும் தகராறுகள் தீர்க்கப்பட வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது.

ஆனால் உணவில் உப்பு குறைந்து விட்டது அல்லது காரம் அதிகமாகிவிட்டது போன்ற சிறு செயல்களுக்கெல்லாம் கணவன் மனைவி பெரும் கூட்டத்தை கூட்டி ஒருவர் மற்றவரை குறைகூறும் காலம் அதிகரித்துவிட்டது. சில நேரத்தில் தலாக்கில் கூட முடிந்து விடுகின்றது. இவைகள் அனைத்தும் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து குடும்ப வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்த வேண்டும். நம் அனைவருக்கும் அப்படிப்பட்ட வாழ்க்கையை அல்லாஹ் தந்தருள்வானாக!

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: இன்னும், அவர்களுடன் கனிவோடு நடந்து கொள்ளுங்கள் - நீங்கள் அவர்களை வெறுத்தால் (அது சரியில்லை ஏனெனில்) நீங்கள் ஒன்றை வெறுக்கக் கூடும் அதில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை ஏற்படுத்தி விடலாம். (அல்குர்ஆன் 4:19)

இன்று சிலர் தன் மனைவியை, தன் குடும்பத்தாருக்கு முன் வைத்தே அவமானப்படுத்துவதும், அடிப்பதும் சர்வசாதாரணமாக்கிக் கொண்டுள்ளார்கள். இவைகள் அனைத்தும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டதாகும். அப்படி ஏதாவது தன் மனைவிக்கு ஒழுக்கம் கற்பிக்க விரும்புவோர் தன் வீட்டினுள் வைத்து ஒழுக்கம் கற்பித்துக் கொடுக்க வேண்டும். பிறருக்கு முன் வைத்து அவமானப்படுத்தக்கூடாது. இதுவே நாம் மேல் கூறிய குர்ஆன் மற்றும் ஹதீதுகள் கூறும் போதனையாகும்.

இன்ஷாஅல்லாஹ் தொடரும்...

# பொறாமை

*- உண்மை விரும்பி*

அல்லாஹ் திருமறையில் சூரா பகராவின் 90வது வசனத்தில் குறிப்பிடுகின்றான், தன் அடியார்களில் தான் நாடியவர் மீது தன் அருட்கொடையை அல்லாஹ் அருளியதற்காக பொறாமைப்பட்டு, அல்லாஹ் அருளியதையே நிராகரித்து தங்கள் ஆத்மாக்களை விற்று அவர்கள் பெற்றுக் கொண்டது மிகவும் கெட்டதாகும். இதனால் அவர்கள் (இறைவனுடைய) கோபத்திற்கு மேல் கோபத்திற்கு ஆளாகி விட்டார்கள். (இத்தகைய) காஃபிர்களுக்கு இழிவான வேதனை உண்டு

மேலும் பொறாமைக்காரன் பொறாமை படும்போது ஏற்படும் தீங்கை விட்டும் (காவல் தேடுகிறேன்). (113:5)

மனிதர்கள் தமது வாழ்வில், தொழிலில், கல்வியில், உடமையில் என்று அனைத்திலும் பிறரை ஒப்பீடு செய்தே தமது வளர்ச்சியை அளக்கிறார்கள், அடையவும் செய்கிறார்கள். இத்தகைய ஒப்பீடு என்பது போட்டியாக இருக்கும் வரையில் அது வளர்ச்சிக்கு உதவும்; ஆனால் அதே ஒப்பீடு பொறாமை என்று ஆகும் போது வளர்ச்சியைக் கெடுக்கும்.

எனவே முன்னேற விளைபவர்கள் போட்டி மனப்பான்மைக்குப் பதிலாக பொறாமை அடைவதால் கேடே விளையும். எனவே அவர்கள் வளர்ச்சி அடைவதும் இல்லை. போட்டியை மட்டும் சிந்தித்து பொறாமை இன்மையைக் கொண்டவர்கள் முன்னேற்றங்களில் குறைப்படுவதும் இல்லை. அவரது முன்னேற்றங்கள் நேர்மறை எண்ணத்தால் வளர்ந்து கொண்டேதான் இருக்குமே தவிர குறையாது.

போட்டிக்கும் பொறாமைக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் இதுவே. போட்டி மனப்பான்மை என்பது போட்டியாளருக்குக் கெடுதல் எண்ணாமல், செய்யாமல் தன் உழைப்பால் தான் முன்வருதல் என்பதே. மாறாக பொறாமை என்பது போட்டியாளருக்குக் கெடுதல் எண்ணுவதும்; செய்வதும் அதன் மூலம் தான் உயர நினைப்பதும் ஆகும்.

ஓட்டப் பந்தயத்தில் மனதைச் செலுத்தி அருகில் ஓடுபவரைக் காட்டிலும் வேகமாக முன்னேற நினைப்பது போட்டி. அவர் வென்றாலும் அதைப் பாடமாய்க் கொள்ளுதல், அவரை வாழ்த்துதல் என்பவை அனைத்தும் நன்னெறிகள். அவர் அடுத்த நிலையில் வென்றினும் கூடப் பாராட்டுதல் என்பது நேர்மறையான நல் ஒழுக்கம்.

மாறாக அவருக்குத் தொந்தரவு கொடுத்தல், காலை இடறுதல், வாரி விடுதல், அன்றில் தடம் மாற்றி இடர் கொடுத்தல், வயதையோ அன்றில் வேறு காரணங்களைக் காட்டிக் குறை சொல்லுதல், அவரைத் தகுதி இழக்க முயற்சித்தல் எனும் செய்கைகளால் அன்றில் எண்ணத்தால் தான் முதன்மை வர நினைத்தல் பொறாமை. அவர் எந்த நிலையில் வென்றினும் அவரது வெற்றியைப் பாராட்டாது பகை கொள்ளுதல் என்பது பொறாமையினால் விளையும் தீ நெறியே.

போட்டியாளன் நம்பிக்கையாளன். பிறரின் முன்னேற்றத்தால் இயற்கையாகவே தனக்கும் முன்னேற்றம் வரும் என நம்புவான். பிறரின் வெற்றியை ஆராய்ந்து பயின்று நல்லவற்றைத் தனது முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளுவான். பிறர் வளருவதால் தானும் வளர்கிறோம் என்று நம்புவான். நல் இணக்கத்தோடு முன்னேற்றத்தை மட்டுமே சிந்திப்பான்.

பொறாமையாளன் நம்பிக்கை அற்றவன். பிறர் முன்னேறிவிட்டால் தான் தோற்றுவிடுவோம் என எதிர்மறையாக நினைப்பான். நம்பிக்கை இழப்பான். எனவே பிறரின் நலனில் மனம் புழுங்குவான். தீய வழிகளையும், தீயதையுமே எண்ணுவான். எனவே இயற்கையான வளர்ச்சியையும் விடுத்துப் பின் தங்குவான். ஆகையினால் அவனுக்கு முன்னேற்றம் என்பதே இருக்காது.

போட்டியாளன் பொறாமை அற்றவன். எனவே அவனுக்கு முன்னேற்றத்தில் குறைவே இருக்காது.

எனவே மனிதர்கள் வாழ்வில் முன்னேற போட்டிகளே வேண்டும். பொறாமைகள் அல்ல.

**குறிப்புரை: பொறாமையால் வளர்ச்சியும் இல்லை; பொறாமை இன்மையால் வளர்ச்சியில் குறைவும் இல்லை.**

# சமூகச் சீரழிவுகள்...

# எச்சரிக்கை!! காசாகும் குடும்ப அந்தரங்கங்கள்

குற்றத்துக்கு ஆதாரம்... அதுவே, கூசவைக்கும் வியாபாரம்... அது எது?

இப்படி யாராவது விடுகதை போட்டால், தயங்காமல் சொல்லலாம் 'கேமரா செல்போன்' என்று!

ஆம்... ஆந்திர ஆளுநர் மாளிகைக்குள் எடுக்கப் பட்டதாக 'திவாரி - சவாரி' வீடியோ காட்சிகள் வெளியான மறுநாள் நம் அலுவலகத்துக்கு வந்த பார்சல், மேற்சொன்னபடிதான் நம்மை மருள வைத்தது!

'இன்னும் பல பெண்களின் வாழ்க்கை பாழாவதற்கு முன்னால் இதுபற்றித் தீர விசாரித்து ஜூனியர் விகடனில் எச்சரிக்கை ரிப்போர்ட் எழுதுங்கள்' என்று இறைஞ்சியது, அந்த சி.டி-யுடன் இருந்த ஒரு கடிதம்!

சி.டி-யை ஓடவிட்டதுமே அதில் விரிந்த ஆபாசக் காட்சிகளை நம்மால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. அதேசமயம், அந்த ஒரே சி.டி-க்குள் அடுத்தடுத்து பதிவாகி இருந்தவை, வெவ்வேறு ஜோடிகள் சம்பந்தப்பட்ட காட்சி என்பதை உணர முடிந்தது. உணருவதென்ன... எந்த ஒளிவுமறைவோ, இருட்டு நிழலோ இல்லாமல் தெள்ளத் தெளிவாக ஓடின காட்சிகள்.

சி.டி-யுடன் இணைத்திருந்த கடிதம், "இதில் உள்ள எல்லா ஜோடிகளுமே கணவன் - மனைவியர்தான். அவரவர் வீட்டுப் படுக்கையறையில் அரங்கேறிய அந்தரங்கங்கள்தான் இவை. காதோடு வைத்து ரசிக்க வேண்டிய தாம்பத்யம் என்ற சங்கீதத்தை, செல்போன் கேமரா கொண்டு விளையாட்டாகப் பதிவு செய்ததன் மூலம், இப்படி ஊரறிய அலறும் லவுட் ஸ்பீக்கராக மாற்றி விட்டார்கள். காஞ்சி காம குருக்கள் தேவநாதன் விஷயத்தில் நடந்தது போலவே, இவர்களின் செல்போனை சர்வீஸுக்குக் கொடுத்தபோதோ... பொருள் மாற்றம் (Exchange) செய்து விற்றபோதோ இவர்கள் அழித்திருந்தும் (delete), மீட்டெடுப்பு (retrieve) செய்யப்பட்ட காட்சிகள்தான் இவை.

இத்தனையும் கூறுகிற நானும் ஒரு செல்போன் சர்வீஸ் சென்டரில் வேலை பார்ப்பவன்தான். அடுத்தவர்களின் அந்தரங்கத்தை வெறியோடு தோண்டியெடுத்து, அதை மொத்தமாக சி.டி. போட்டு விற்கிற வக்கிரம், சில செல்போன் சர்வீஸ்காரர்களின் மூலமாக நடக்கிறது. அதிலும், கள்ள உறவுகளை இதுபோன்ற பதிவுகளாகப் பார்த்து அலுத்துவிட்ட ஒரு வக்கிர கும்பலுக்கு... இதுபோன்ற 'நல்ல உறவுகளை'ப் பார்க்கிற ஆசை வந்து... அதுவே இப்படி செட் செட்டாக மார்க்கெட்டில் விற்கிறது!" என்று கிட்டத்தட்ட கதறியிருந்தது.

சைபர் கிரைம் பிரிவில் உள்ள நமது நட்பு போலீஸாரிடம் இதுபற்றி தமிழகம் முழுவதும் விசாரித்தபோது... கடிதத்தின் வார்த்தைகள் எத்தனை சத்தியமும் வீரியமும் மிக்கவை என்று புரிந்தோம்... மொத்தமாக அதிர்ந்தோம்! "ரியாலிட்டி கிளிப்பிங்ஸ் என்று இதற்குப் பேர் வைத்து விற்கிறார்கள். சர்வீஸுக்கு ஒரு செல்போன் வருதுன்னாலே 'டெலிட்' செய்யப்பட்ட பிறகும் அதில் பதுங்கியிருக்கிற விஷயங்கள் என்னென்ன என்பதை ஆராய்வது, பல கடைகளில் உள்ள வயசுப் பையன்களின் வேலையாக இருக்கிறது. அதிலும் கண்ணுக்கு லட்சணமான பெண்கள் வந்து சர்வீஸுக்குக் கொடுத்தால், தேடல் ரொம்ப பலமாகிவிடும்.

மனைவியைவிட்டுப் பிரிந்து வெகு தூரத்தில் வேலை பார்க்கிற ஒருசில கணவர்கள்தான் இப்படி தங்கள் அந்தரங்கத்தை மனைவிக்குத் தெரிந்தே பதிவு செய்து வைத்துக் கொள்கிற தவறை முதலில் அரங்கேற்ற ஆரம்பித்தார்கள். பிரிவுத் துயரத்தின்போது, பர்ஸுக்குள் இருக்கிற போட்டோவை எடுத்துப் பார்க்கிற மாதிரி இதுவும் அவர்களுக்கு சர்வ சாதாரணமாகத் தெரிந்திருக்கிறது. அதனால்தான், இந்த வீடியோவின் காட்சிகளில் வருகிற மனைவியர் முதலில் ஏகத்துக்கும் வெட்கப்படுவதும், பிறகு கள்ளங்கபடமேயில்லாமல் காஷுவலாக இருப்பதுமாக சில ஒற்றுமைகள் தெரியும்.

எங்களுக்குத் தெரிந்து செல்போன் சர்வீஸ் நிலையங்களில் வேலை பார்க்கும் சில இளைஞர்கள் பெரிய நகரங்களில் தங்களுக்குள் சங்கம் அமைக்காத குறையாக இதுபோன்ற காட்சிகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். இன்னும் சில புத்திசாலிகள்தான்?, இவற்றையெல்லாம் தொகுத்து சி.டி-யாக்கி அதன் மாஸ்டர் காப்பியை பல ஆயிரம் ரூபாய்கள் வரை விற்கிறார்கள். சென்னையில் அப்படிப்பட்ட நான்கைந்து பேருக்கு நாங்கள் பொறி வைத்திருக்கிறோம்" என்றவர்கள்,

"தன் மனைவியை இப்படி வற்புறுத்தி பதிவு செய்துவிட்டு, அதையே தன் நண்பர்கள் கண்ணுக்கு தீனியாக்கிய ஒரு கணவனை லேட்டஸ்டாகப் பிடித்திருக்கிறோம்" என்று சொல்லி, நம்மை மாதவரம் போலீஸாரிடம் அனுப்பி வைத்தார்கள். அந்த ஏரியாவைச் சேர்ந்த ஆன்னெல்லா டால்மியா என்ற பெண்மணியின் பரிதாபக் கதையைச் நம்மிடம் சொன்னார் மாதவரம் இன்ஸ்பெக்டர் குமரன்.

### ஏடாகூட எரல் எல்லீஸ்!

"டால்மியாவின் கணவர் எரல் எல்லீஸ் தனியார் கார் கம்பெனி ஒன்றில் லட்சக் கணக்கில் சம்பளம் வாங்கும் பொறுப்புள்ள அதிகாரி. போன ஜனவரி மாதம்தான் ரெண்டு பேருக்கும் திருமணம் நடந்திருக்கு. மணமான நாளில் இருந்தே எரல் எல்லீஸ் புளூ ஃபிலிம் பார்க்கச் சொல்லி டால்மியாவை வற்புறுத்தி இருக்கார். இன்றைய காலகட்டத்தில் பல தம்பதிகள் இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்த்து, அதன்படியே உறவு வச்சுக்க விரும்புறாங்க. டால்மியாவிடமும் இதை வலியுறுத்தி இருக்கார் எரல் எல்லீஸ். இதனையெல்லாம் தாண்டி உச்சகட்டமாக மனைவியுடன் தனிமையிலிருந்த தருணத்தை அப்படியே செல்போனில் படம் பிடிக்கவும் செய்திருக்கிறார். 'கணவர்தானே படம் எடுக்கிறார்' என்று வேறு வழியில்லாமல் டால்மியாவும் பொறுத்துக் கொண்டார். ஆனால், அடுத்த சில நாட்களிலேயே எரல் - டால்மியா உறவுக் காட்சிகள் மாதவரம் ஏரியாவில் பலருடைய செல்போன்களுக்கும் பரவத் தொடங்கிவிட்டது. ஒருகட்டத்தில், குடும்ப நண்பர்

ஒருவர் மூலம் டால்மியாவுக்கே இது தெரியவர... நடுங்கிப் போனவராகக் கணவரிடம் அதுபற்றி விசாரித்திருக்கிறார். அப்போதுதான் அந்த தாம்பத்திய காட்சிகளை நண்பர்கள் சிலருக்கு எரல் எல்லீஸ் போட்டுக் காட்டிய உண்மை தெரிந்திருக்கிறது. ப்ளூடூத் மூலம் அதை வாங்கிக்கொண்ட ஒரு நண்பர் மூலமாகவே அந்தக் காட்சிகள் ஒரு செல்போன் சர்வீஸ் நிலையத்துக்கு வந்து, அங்கிருந்து வியாபாரமாகிவிட்டது. டால்மியா கொடுத்த புகாரின் பேரில் இப்போது எரல் எல்லீஸை சிறையில் அடைத்திருக்கிறோம்..." எனச் சொன்னார் இன்ஸ்பெக்டர் குமரன்.

## பூகம்ப புவனேஸ்வரன்!

கோவை போலீஸாரிடமிருந்து நமக்கு வந்துசேர்ந்த விவரம் அடுத்தகட்ட பயங்கரம்!

இவர்களிடம் சிக்கி இருக்கும் புவனேஸ்வரன் என்பவனோ, பல பெண்களோடு பாச நேசமாகப் பழகி, நெருக்கமான காட்சிகளைப் பதிவு செய்து, அதனை சந்தைக்குக் கொண்டுவந்து, இப்போது போலீஸில் சிக்கி இருக்கிறான். "ஓரளவுக்கு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன்தான் இவன். 10-ம் வகுப்புக்கு மேல படிப்பு ஏறாததால, ஊர் சுத்த ஆரம்பிச்சிருக்கான். 20 வயசுலயே லவ் பண்ணி ஒரு பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டான். அந்தப் பொண்ணைக் கொஞ்ச நாள்ல துரத்தி விட்டுட்டு, காலேஜ் பொண்ணுங்களை குறிவச்சு கவர் பண்ண ஆரம்பிச்சு இருக்கான்.

அவன்கூட ஸ்கூல்ல படிச்ச பசங்க, இப்போ காலேஜ் படிச்சுக்கிட்டு இருக்காங்க. அவங்களோட மொபைல்ல இருக்கிற பொண்ணுங்க நம்பரை மட்டும் நோட் பண்ணிட்டு, தினமும் ராத்திரி நேரத்துல அவங்களுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்ப ஆரம்பிச்சிருக்கான். புது நம்பர்ல இருந்து எஸ்.எம்.எஸ். வருதேன்னு, விவரம் புரியாம கூப்பிட்டுப் பேசுற பொண்ணுங்ககிட்ட நைஸா பேச்சை வளர்த்திருக்கான். தொடர்ந்து பேசியவர்களுக்கு அடுத்த கட்டமாக ஆபாச எஸ்.எம்.எஸ், வீடியோ கிளிப்பிங்க்ஸ் அனுப்பி வச்சு கொஞ்சம் கொஞ்சமா... தன்னோட வலைக்குள்ள விழ வச்சிருக்கான். 'கல்யாணம் பண்ணிக்கிறேன்' என நம்பிக்கை வார்த்து அதன் மூலமாகவே அவர்களை வலையில் வீழ்த்தியிருக்கான். அதை அப்படியே செல்போன்ல படம் பிடிக்கவும் செஞ்சிருக்கான். செல்போன் பதிவுக்கு மறுக்கும் பெண்களிடம், 'நீ இல்லாத நேரத்தில இதைப் பார்த்தாவது என் மனசை ஆத்திக்கிடுவேன்டா செல்லம்' என்றெல்லாம் அவர்கள் ரூட்டிலேயே பேசி மசிய வைத்திருக்கிறான்.

இவனோட வலையில கோவையைச் சேர்ந்த தொழிலதிபர்கள், உயர் அதிகாரிகளோட குடும்ப வாரிசுகளும் சிக்கி இருக்காங்க. பத்திரிகைத் துறையில் இருக்குற ஒருத்தரோட பொண்ணையும் அவன் விட்டு வைக்கலை. யார் யாரோடெல்லாம் சகவாசம் வச்சிருந்தேன்னு காட்டுவதற்காக நண்பர்கள் பலருக்கும் புளூடூத் வழியாகவும், எம்.எம்.எஸ். மூலமாகவும் உறவுக் காட்சிகளை புவனேஸ்வரன் அனுப்பி இருக்கான். நண்பர்கள் சிலர் மூலமா இதை மோப்பம் பிடிச்ச செல்போன் கடைக்காரங்க, அதை 'செட்'டா சி.டி. போட்டு தமிழகத்தின் பல திசைகளுக்கும் பரப்பி, காசு பார்த்திருக்காங்க. சமீபத்தில புவனேஸ்வரன் சம்பந்தப்பட்ட கிளிப்பிங்க்ஸ் காட்சியைப் பார்த்த கோவை உயரதிகாரி ஒருத்தர் குலை நடுங்கிப் போயிட்டார்.

புவனேஸ்வரனோட இணைஞ்சிருந்ததில் ஒரு பொண்ணு, அவரோட பொண்ணு! 'சார், இந்தப் பையனை எங்க ஏரியாவிலேயே நான் பார்த்திருக்கேன்' அப்படினு கலங்கிப்போய் அந்த அதிகாரி சொல்ல... அப்படித்தான் புவனேஸ்வரன் எங்க கவனத்துக்கே வந்தான். புவனேஸ்வரனோட செல்போன் நம்பரை ஃபாலோ செஞ்சு, அவனை வசமா அமுக்கிப் பிடிச்சோம். அவன்கிட்ட இருந்து மூணு மொபைல் போன், எட்டு சிம் கார்டுகளை பறிமுதல் செஞ்சோம். போன் மூலம் பெண்களை வளைக்கிறதுக்கும், அவங்களை கூட்டிட்டுப் போறதுக்கும் தன்னோட மோட்டார் பைக்கையே அடமானம் வெச்சிருக்கான். ஆனா, அவன் மூலமாக கிடைச்ச காட்சிகளை சி.டி. போட்டு பல ஆயிரங்களை சிலர் சம்பாதிச்சிருக்காங்க. அவங்க யார் யார் என்பதற்கான ஆதாரங்களைத் தேடிக் காத்திருக்கிறோம்.

'பல பொண்ணுங்க வாழ்க்கை உன்னால சீரழிஞ்சு போச்சேடா...'ன்னு நாங்க கேட்டதுக்கு, 'என்னைப் பத்தி எந்தப் பொண்ணும் புகார் கொடுக்க மாட்டா. ஏன்னா, நான் அவங்க ஒவ்வொருத்திக்கும் உயிருக்கு உயிரான காதலன்னு தெனாவெட்டா சொல்றான்!" என்று சொல்லித் திகைக்க வைக்கிறார்கள் அவனை வளைத்த போலீஸார்.

புவனேஸ்வரனிடம் விசாரணை நடத்திய கோவை மாநகர நுண்ணறிவுப் பிரிவு இன்ஸ்பெக்டர் பாலமுருகனிடம் பேசியபோது, "எழுத்துப்பூர்வமா அவன் மேல புகார் கொடுக்க யாருமே முன்வரல. அந்தக் காட்சிகளை காட்டி சிலர்கிட்ட மிரட்டிப் பணம் பறிக்கவும் செஞ்சிருக்கான். அது சம்பந்தமான புகாரை வெச்சு அவன் மேல செக்ஷன் 384-ன் கீழ் வழக்குப் பதிவு செஞ்சிருக்கோம். அவனோட நண்பர்கள்கிட்டேயும் விசாரணை நடந்துகிட்டு இருக்கு. அவன்கிட்ட ஏமாந்த பெண்கள் எழுத்துப்பூர்வமா தைரியமா புகார் தரலாம். அவங்களைப் பத்தின தகவலை வெளியில கசிய விடமாட்டோம்!" என்றார்.

## 'பள்ளியறை' செல்வராஜ்!

சென்னை மணலியைச் சேர்ந்த எம்.ஏ. பட்ட தாரியான செல்வராஜ் செய்ததும் உச்சகட்ட அயோக்கியத்தனம். மனைவி, குழந்தைகள் என்று அழகான குடும்பம். மணலியில் ட்யூஷன் சென்டர் நடத்தி வந்த செல்வராஜிடம் பள்ளிப்பாடம் படிக்க வந்திருக்கிறாள், ப்ளஸ் ஒன் மாணவியான சுஜா (பெயர் மாற்றப்பட்டுள்ளது). பருவத்தின் வாசலில் நின்றிருந்த சுஜாவைப் பார்த்துக் கிறங்கிப் போன செல்வராஜ்... நைஸாகக் காய் நகர்த்தியதில், அறியாப் பருவத்து சுஜா வலையில் விழுந்துவிட்டாள். அவர்களுக்கிடையே 'அத்தனையும்' நடந்திருக்கிறது.

சுஜாவோடு தான் இருந்த தனிமைத் தருணங்களை யெல்லாம் மறக்காமல், தனது செல்போன் கேமராவில் படமாக்கிய செல்வராஜ், தனது சாகசத்தை நண்பர்களுக்குக் காட்டி மகிழ... அந்தக் காட்சிகளும் பலருடைய செல்போன்களுக்கும் பரவியது. இப்போது செல்வராஜ் கைதாகிவிட... சுஜா தனது பள்ளிக்கூடத்துக்குக்கூடப் போக முடியாத இக்கட்டில் சிக்கித் தவிக்கிறார். காரணம், பல மூலைகளுக்கும்

அந்தக் காட்சிகள் பரவி... குடும்பத்தைக் குத்திக் கிழிக்கும் வகையில் கேள்விகளும் பார்வைகளும் வரத் தொடங்கியதுதான்.

### எனக்கே எனக்கா... எச்சரிக்கை ப்ளீஸ்!

'எனக்கே எனக்காக என் செல்போனில்தானே பதிவு செய்கிறேன். நானே பார்த்து ரசித்துவிட்டு ஃபைலையும் அழித்துவிடுவேன். யாருக்கும் எதுவும் தெரியாது!' என்ற எண்ணத்தோடுதான் சில தம்பதிகள் இப்படி எல்லை தாண்டுகிறார்கள். செல்போன் மெமரி கார்டு, கம்ப்யூட்டர் ஹார்ட் டிஸ்க்குகளில் இருந்தெல்லாம் அழிக்கப்பட்ட பிறகும், அந்த ஃபைல்களை எடுக்க ஏராளமான 'ரெக்கவரி சாஃப்ட்வேர்'கள் இப்போது வந்து விட்டன என்பதை இவர்கள் மறந்துவிடவே கூடாது. 'அதை'யெல்லாம் படம் எடுப்பது என்ற எண்ணத்தையே ஒழித்துவிட்டால் தொல்லையே கிடையாது!" என்று எச்சரிக்கை வாசிக்கிறார்கள் சைபர் கிரைம் போலீஸார்.

இப்படி எதிர்பாராத விதமாக செல்போன் காட்சிகள் வெளியே பரவியதன் மூலம், வட மாவட்டத்தின் ஒரு கடையில் வேலை பார்த்த சேல்ஸ் கேர்ள் தற்கொலை செய்துகொண்ட சம்பவமும், கோவை மாவட்டத்தில் ஒரு குடும்பத் தலைவி விவாகரத்து வரை போன விவகாரமும் போலீஸாரின் ரகசிய ஃபைலில் இருக்கிறது!

*நன்றி: ஜூனியர் விகடன்*

---

*கொடுப்பதும் எடுப்பதும் ... முதல் பக்கத் தொடர்ச்சி...*

வாழ்விலும் ஒரு முக்கியமான அம்சம் என்பது பொது விதி. ஆனால் இஸ்லாம் ஒருபடி மேலே போய் 'ஒருவன் திருமணம் புரிந்தால் அவன் இறைமார்க்கத்தில் ஒரு பகுதியை நிறைவேற்றி விட்டான். எஞ்சியவற்றில் அவன் இறைவனை அஞ்சி நடந்து கொள்ளட்டும்.' (பைஹகி) என்று கூறுகிறது. இன்னும் ஒரு நபிமொழி இக்கருத்தை வலியுறுத்துகிறது. 'திருமணம் என் வழிமுறை (சுன்னத்). என் வழிமுறையைப் புறக்கணித்தவர் எம்மைச் சார்ந்தவர் அல்லர்.' (இப்னு மாஜா)

### திருமணத்தால் அமைதி கிடைக்கிறது

'அவன் உங்களுக்காக உங்கள் இனத்திலிருந்தே மனைவியரைப் படைத்தான். நீங்கள் அவர்களிடம் அமைதி பெற வேண்டும் என்பதற்காக. மேலும் உங்களிடையே அன்பையும் கருணையையும் தோற்றுவித்தான். திண்ணமாக, சிந்திக்கும் மக்களுக்கு இதில் நிறைய சான்றுகள் உள்ளன' (அல்குர்ஆன் 30:21)

இந்த வசனத்தைப் படித்தால் மட்டும் போதாது சிந்திக்க வேண்டும்..

குழந்தைகள் தான் திருமண வாழ்வின் பரிசு. அவர்கள் பெற்றோர்களுக்குக் கண்குளிர்ச்சியாகவும், பரபரப்பான வாழ்வில் அமைதி கொடுப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இறைவன் அனுமதித்த முறையில் இனவிருத்திக்கும் திருமணமே சிறந்தது என்பதை கீழ்வரும் வசனம் உணர்த்துகிறது.

'மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்.' (அல்குர்ஆன் 4:1)

### கொடுப்பது

கீழே உள்ளவை, நம்பிக்கையாளர்களுக்கு வெளிச்சம் தரக்கூடிய இரு ஒளிகளாகிய குர்ஆன், ஹதீஸ் இவற்றில் 'கொடுப்பது' பற்றி உள்ள செய்திகள், கட்டளைகள்.

'பெண்களுக்கு அவர்களின் மணக்கொடையை (மஹர்) மனமுவந்து வழங்கிவிடுங்கள்.' (அல்குர்ஆன் 4:4)

'நபியே! எவர்களுக்கு நீர் அவர்களுடைய மஹரை கொடுத்து விட்டீரோ அந்த உம்முடைய மனைவியரை...நாம் உமக்கு ஹலாலாக்கி இருக்கின்றோம்..' (அல்குர்ஆன் 33:50)

'பெண்களை நீங்கள் தீண்டுவதற்கு முன், அல்லது அவர்களுடைய மஹரை நிச்சயம் செய்வதற்கு முன், தலாக் சொன்னால் உங்கள் மீது குற்றமில்லை. ஆயினும் அவர்களுக்குப் பலனுள்ள பொருள்களைக் கொடு(த்து உதவு)ங்கள் - அதாவது செல்வம் படைத்தவன் அவனுக்குத் தக்க அளவும், ஏழை அவனுக்குத் தக்க அளவும் கொடுத்து, நியாயமான முறையில் உதவி செய்தல் வேண்டும். இது நல்லோர் மீது கடமையாகும்.' (அல்குர்ஆன் 2:236)

'..அவர்களுக்கு உங்கள் செல்வங்களிலிருந்து (மஹராக) கொடுத்துத் (திருமணம் செய்யத்) தேடிக் கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாறு (சட்டப்பூர்வமாக மணந்து கொண்ட) பெண்களிடமிருந்து நீங்கள் சுகம் அனுபவிப்பதால் அவர்களுக்காக (விதிக்கப்பட்ட மஹர்)தொகையைக் கடமையாக கொடுத்து விடுங்கள்...' (அல்குர்ஆன் 4:24)

'எந்த நிபந்தனையின் வாயிலாக நீங்கள் பெண்களின் கற்புக்கு உரிமையாளர்களாய் ஆகிறீர்களோ அதுவே மற்றெல்லா நிபந்தனைகளை விட முன்னதாக நிறைவேற்றிட உரிமை பெற்ற நிபந்தனையாகும்.' (நபிமொழி - புகாரி, முஸ்லிம்)

### எடுப்பது

கொடுப்பதைப் பற்றி அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் கூறியுள்ளவற்றைப் பார்த்தோம். 'எடுப்பது' என்பதைப் பற்றி, அதாவது திருமணம் செய்யப் போகும் பெண்ணிடமிருந்தோ அவளுடைய பெற்றோரிடமிருந்தோ 'எடுப்பது' பற்றி ஏதாவது இருக்கிறதா என்று குர்ஆனின் 114 அத்தியாயத்திலும் தேடினாலும் ஒரு வசனம் கூட கிடைக்கவில்லை. நபி (ஸல்) அவர்கள் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் போது, தோட்டம், திர்ஹம், தங்கம் இவை மட்டுமல்லாமல் இரும்பு மோதிரம், கேடயம் ஏன் மனப்பாடம் செய்த சூராவைக் கூட மஹராக ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்களைப் பார்க்கிறோம். ஆனால் பெண் இத்தனை பவுன் நகை, சீர் வரிசை, பலகாரங்கள், இத்தியாதிகள் இவற்றுடன் கணவன் வீட்டுக்குச் சென்றாள் என்று எந்தக் குறிப்பும் இல்லை.

### 'எடுப்பது' எப்படி வந்தது?

பெண் வீட்டாரிடமிருந்து வாங்குவது என்பது மற்ற

சமுதாயத்தினரின் செயல். பெண் என்றால் சீதனத்துடன் தான் கணவன் வீட்டிற்குச் செல்ல வேண்டும், மாப்பிள்ளைக்கு வரதட்சணை தர வேண்டும் என்பதெல்லாம் 'அவர்கள்' சம்பிரதாயங்கள். இறைவேதத்தையும், நபிவழியையும் முதுகுக்குப் பின்னால் தூக்கிப் போட்டு விட்டு 'அவர்களை'ப் பின்பற்ற ஆரம்பித்து விட்டோம் நாம்.

ஒரு பேச்சாளர் 'இப்போது நடக்கும் திருமணங்கள் வியாபாரம் போல் ஆகிவிட்டன.' என்று குறிப்பிட்டார். இது என்னைச் சிந்திக்க வைத்தது – வியாபாரம் என்றால் பணத்தைக் கொடுத்து ஒரு பொருளை வாங்குவது அல்லது பொருளை விற்று பணத்தைப் பெறுவது. சரி, நம் கையை விட்டுப் பணம் போகும் போது பொருள் நம் கைக்கு வர வேண்டும் - அது தான் வியாபாரம். ஆனால், திருமணத்தில் பணம் நம் கையை விட்டுப் போகிறது, பெண்ணும் போகிறாள், ஆனால், நம் கைக்கு எதுவும் வருவதில்லை. இது எந்த வியாபார விதிக்கும் உட்பட்டதாக இல்லையே.. மோசடி வியாபாரமாக அல்லவா இருக்கிறது!

சந்தையில் மாடு விற்பவன் கூட மாட்டைக் கொடுத்து விட்டுப் பணத்தை எண்ணி வாங்கிக் கொள்கிறான். ஆனால் பெண்ணைப் பெற்றவனோ, பெண்ணையும் கொடுத்து, பொன்னையும் கொடுத்து, சீர் என்ற பெயரில் புழங்குவதற்கு சாமான்களையும் கொடுத்து, பிறகு பணத்தையும் கொடுக்கிறான்.. நம் பெண்கள் மாட்டைவிடவா கேவலமாகி விட்டார்கள்?

**சந்தையில் மாடு விற்பவன் கூட மாட்டைக் கொடுத்து விட்டுப் பணத்தை எண்ணி வாங்கிக் கொள்கிறான். ஆனால் பெண்ணைப் பெற்றவனோ, பெண்ணையும் கொடுத்து, பொன்னையும் கொடுத்து, சீர் என்ற பெயரில் புழங்குவதற்கு சாமான்களையும் கொடுத்து, பிறகு பணத்தையும் கொடுக்கிறான்.. நம் பெண்கள் மாட்டைவிடவா கேவலமாகி விட்டார்கள்?**

இதை பெண்களும் யோசிக்க வேண்டிய விஷயம்.. பொன்னோடும், பொருளோடும் மாமியார் வீட்டுக்குப் போவது தான் பெருமை என்ற எண்ணத்தை பெண்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். ஏனோ தெரியவில்லை நம் சகோதரர்களுக்கு தவ்ஹீத் சிந்தனை திருமணமான பிறகு தான் வருகிறது. வாங்கிய வரதட்சணையைத் திருப்பிக் கொடுக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் இந்த விழிப்புணர்வு திருமணத்திற்கு முன்பே வந்திருந்தால் வரதட்சணை கொடுக்க வசதியற்ற பெண்ணுக்கு வாழ்வு கிடைத்திருக்கும்.

### மறைமுகமாக எடுப்பது

வரதட்சணை என்று ரொக்கமாக வாங்காவிட்டால் தாங்கள் நபிவழியில் திருமணம் புரிந்ததாக சிலர் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள். மார்க்கத்தில் இல்லாத நூதன விழாக்களால் பெண் வீட்டிற்கு எத்தனை வீண் செலவுகள்! பெண் பார்த்தல், நிச்சயதார்த்தம், மருதாணி விழா, ஆடம்பரமான மண்டபம் அல்லது ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நிக்காஹ் விருந்து, மறு வீடு என்று விருந்துக்கு மேல் விருந்தாகவும், பலகார வகைகள், சீர் என்று வித விதமான செலவினங்கள். கட்டில், பீரோ, ஏசி, ஃபிரிஜ் என்பதெல்லாம் காலத்தின் கட்டாயமாகிவிட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, தங்கம் விற்கும் விலையில் படித்த மாப்பிள்ளை என்றால் குறைந்த பட்சம் ஐம்பது பவுன் என்பது எழுதாத சட்டமாகி விட்டது. இத்தனையையும் கேட்டு வாங்கினால் தானே தவறு? கேட்காமலேயே வரக்கூடிய இடமாகப் போய் பெண் எடுத்தால் வம்பில்லையே.. 'வீண் செலவு செய்பவர்கள் ஷைத்தானின் சகோதரர்கள்' (அல்குர்ஆன் 17:27) என்ற திருவசனம் இவர்களின் மனதில் பதியவில்லையா? அல்லது, 'வீண்விரயம் செய்பவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை.' (அல்குர்ஆன் 7:21) என்ற வசனத்தை விளையாட்டாக எடுத்துக் கொள்கிறார்களா? அல்லது, 'குறைந்த செலவில் குறைந்த சிரமத்துடன் செய்யப்படும் திருமண நிகழ்ச்சியே சிறந்ததாகும்.' என்ற நபிமொழியைக் காலத்துக்கு ஒவ்வாதது என்று ஒதுக்கி விட்டார்களா?!!

### விளைவுகள்

இன்றைய திருமணங்கள் இறையச்சத்தை அழித்துக் கொண்டிருக்கிறது. எப்படி என்று கேட்கிறீர்களா? அல்லாஹ் திருமறையில், வட்டியைப் பற்றி, 'யார் வட்டி வாங்கித் தின்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்டவனாக எழுவது போலல்லாமல் (வேறு விதமாக) எழ மாட்டான். இதற்குக் காரணம், அவர்கள் 'நிச்சயமாக வியாபாரம் வட்டியைப் போன்றதே' என்று கூறியதினாலேயாம். அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி, வட்டியை ஹராமாக்கி இருக்கிறான்...' (அல்குர்ஆன் 2:275) என்றும் 'ஈமான் கொண்டோரே, இரட்டித்துக் கொண்டே அதிகரித்த நிலையில் வட்டி (வாங்கித்) தின்னாதீர்கள். இன்னும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி (இதைத் தவிர்த்துக் கொண்டால்) வெற்றியடைவீர்கள்.'(அல்குர்ஆன் 3:130) என்றும் கூறி நம்மைக் கடுமையாக எச்சரித்திருக்கிறான்.

இருந்தாலும், பலர் ஒரு பெண் குழந்தை பிறந்தவுடன் எல்.ஐ.சி.இன் திருமகள் திருமணத் திட்டம் என்று வட்டி அடிப்படையில் இயங்கும் வங்கிகளில் சேமிக்கத் தொடங்கி விடுகின்றனர். காரணம், அப்படி சேர்க்கும் தொகை அவள் திருமண வயதில் வட்டியோடு குட்டி போட்டு பெருந்தொகையாக இருக்கும். இப்படி ஹராமாக சேர்த்த பணத்தையோ, அல்லது வட்டிக்கு கடன்பட்டோ தான் கைக்கூலியாகவும், நகையாகவும், சீராகவும், கொடுக்கிறார்கள். நினைத்துப் பார்த்தால் அருவருப்பாக இல்லை? ஒருவன், ஹராமான வழியில் பொருளீட்ட காரணமாயிருப்பது யார் என்று யோசித்துப் பாருங்கள். மறுமையில் அல்லாஹ்வின் தண்டனையை அஞ்சிக் கொள்ளுங்கள்.

ஹஜ் செய்வது இஸ்லாத்தில் கட்டாயக்கடமை. அதாவது பொருள் வசதியும், உடல்வலிமையும் உள்ளவர்கள் செய்ய வேண்டிய கடமை. ஆனால், உடலில் வலு இருந்தும்;, கையில் வழிச்செலவுக்குப் போதுமான பணம் இருந்தும் புனித பயணத்தைத் தள்ளிப் போட அவர்கள் காரணம் காட்டுவது திருமணத்திற்குப் பெண் இருக்கிறாள். அவளுடைய

திருமணக் கடமையை முடித்த பின்பே ஹஜ் செய்ய வேண்டும் என்பதை மார்க்கச் சட்டமாக ஆக்கி விட்டார்கள். மரணம் முந்திக் கொண்டால் ஹஜ் செய்ய முடியாமலே ஆகிவிடும். இதற்கு யார் காரணம் என்பதை சிந்திக்க கடமைபட்டுள்ளோம்;.

ஏழ்மை அல்லது கொள்கைப் பிடிப்பின் காரணமாகவோ வரதட்சணை கொடுக்க முடியாத வீட்டுப் பெண்களில் சிலர் மாற்று மதத்தவர்களைக் கூட மணந்து வாழ்கிறார்கள். 'இணை வைக்கும் ஒருவனை மணத்தல் கூடாது' என்பது இறை கட்டளை. அதை மீற காரணம் யார்?

அல்லாஹ்வினால் ஒப்புக்கொள்ளப்பட்ட மார்க்கமான இஸ்லாத்தில் பிறந்துள்ள நாம், எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! ஆனால், துரதிருஷ்டவசமாக நாம் அனாச்சாரங்களால் அதை எவ்வளவு தூரம் கறைபடுத்த முடியுமோ அவ்வளவு தூரம் கறைபடுத்திக் கொண்டிருக்கிறோமே இது நியாயமா? அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நமக்குக் கற்றுத்தந்துள்ள இஸ்லாமியத் திருமணம் வீண் சம்பிரதாயங்கள் எதுவும் இல்லாத எளிய, அழகிய வாழ்க்கை ஒப்பந்தம். பிறப்பிலிருந்து இறப்பு வரை குர்ஆனும், நபிவழியும் சொல்கிறபடி வாழக் கடமைப்பட்டவர்கள் நாம். மாற்றுமதத்தினரின் வீண் சம்பிரதாயங்களை பின்பற்ற ஆரம்பித்ததனால் நம் சமுதாயத்தில் எத்தனைக் குழப்பங்கள்!

பெண் தேடும் போது, தன்னை விட உயரமான பெண்ணை மணக்க ஒரு ஆண் விரும்புவதில்லை. தன்னை விட உயரம் குறைந்த பெண்ணையே மணக்க விரும்புகிறான். மனோதத்துவரீதியாகப் பார்த்தால், இதற்குக் காரணம், தன் மனைவியை விட தான் உயர்ந்திருக்க வேண்டும், அவள் அன்னாந்து பார்க்கும் விதத்தில் இருக்க வேண்டும் என்ற எண்ணம்தான். உடலளவில் மட்டும் உயர்ந்திருந்தால் போதுமா? உள்ளத்தால் உயருதல் தான் மனிதனுக்கு அழகு. ஒரு பெண்ணும் தன் கணவன் அப்படி உள்ளத்தால் உயர்ந்தவனாக இருக்க வேண்டும் என்றுதான் விரும்புவாள். அப்படிப்பட்டவனையே மதிப்பாள். இஸ்லாம் காட்டும் வழிபடி, மஹர் கொடுத்து மணம் முடித்து, உங்களால் இயன்ற அளவு வலிமா விருந்து கொடுத்து உயர்ந்து காட்டுங்கள். உங்கள் இல்லத்திற்குத் தேவையானதை உங்கள் உழைப்பில் வாங்குவது தான் பெருமை.

இன்று எந்த லாபமும் கருதாமல் ஒரு பெண்ணை மணந்தால், அடுத்த தலைமுறையும் திருந்தும். இந்தப் ஈனப் பழக்கம் வேரோடு அழிந்து விடும். நம் உடலை விட்டு உயிர் பிரிந்த வினாடியே நாம் சொந்தம் என்று சொல்லிக் கொள்ளும் எதுவும் நமக்கு சொந்தம் இல்லாமல் போய்விடும். கபன் துணியைத் தவிர நம்முடைய எந்தப் பொருளும் நம்முடன் வரப்போவதில்லை என்பதை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். 'எடுப்பது' என்பது மாற்றார் வழி.. 'கொடுப்பது' மட்டுமே நம் வழி!

☆ ☆ ☆

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 17)

- டாக்டர் ஷேக் சையது M.D.

கருவில் உருவாகும் சிசு ஆணா? பெண்ணா? என்பதை தீர்மானிப்பது ஆண் விந்தணுதான் என்ற இன்றைய அறிவியல் உண்மையை 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் அற்புதத்தை கடந்த தொடர்களின் மூலம் உங்களுடன் பகிர்ந்து கொண்டேன்.

இந்நிலையில் ஆணின் விந்து முந்தி விடும் போது, ஆணாகவும், பெண்ணின் விந்து முந்தி விடும் போது பெண்ணாகவும் குழந்தை உருவாகிறது என்ற நபி மொழி ஒன்று இருப்பதையும், அதன் அடிப்படையில் கேள்வி ஒன்று எழுவதையும் முந்தைய தொடர்களில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அதாவது சிசு ஆணா? பெண்ணா? என்பதைத் தீர்மானிப்பதில் ஆண் விந்தணுவிற்குள்ள அதே பங்களிப்பு பெண் விந்தணுவிற்(சினைமுட்டைக்)கும் உள்ளது எனும் கருத்து இந்நபி மொழியில் தொனிக்கிறது. அவ்வாறெனில் கருக்குழந்தையின் பாலைத் தீர்மானிப்பது ஆண் விந்தணு மட்டும்தான் என எவ்வாறு கூற இயலும்.?

மேலும், இந்நபிமொழி, இன்றைய அறிவியல் உண்மைக்கு முற்றிலும் முரண்படுவதுடன் குர்ஆனில் இடம் பெற்றிருக்கும் கருத்துக்கே முரண்படுகிறதே என்பதே அந்தக் கேள்வி.

இதற்கான பதிலை புரிந்து கொள்ள சில அடிப்படை தகவல்களை அறிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் கருதி, கர்ப்பப் பையின் வடிவத்தையும், விந்தணுவும், சினை முட்டையும் கர்ப்பப்பையின் எந்த இடத்தில் ஒன்றிணைந்து எவ்வாறு கரு தரிக்கிறது என்ற விவரத்தையும் இதற்கு முந்திய தொடர்களில் உங்களது கவனத்திற்கு கொண்டுவந்தேன். அதனை நினைவு படுத்திக் கொள்ளும் பொருட்டு சுருக்கமாக இதோ!

சுமார் 12 முதல் 16 நாட்களுக்குள் முதிர்ந்து ஃபிலோபின் டியூப்பு(கருக்குழலு)க்குள் செலுத்தப்பட்ட சினை முட்டை கருக்குழலின் மூன்றின் ஒரு பகுதி தூரத்தை அடைந்ததும், விந்தணுவின் வருகைக்காக சுமார் 24 மணி நேரம் வரை உயிருடன் அங்கு காத்திருக்கும், அந்நேரத்திற்குள் விந்தணுவின் சந்திப்பு ஏற்படாத போது சினை முட்டை செத்து மாதவிடாயுடன் வெளியேறிவிடும்.

கருவறையை நோக்கிச் செலுத்தப்பட்ட விந்தணு சினை முட்டையைத் தேடும் முயற்சியில் கருக்குழலுக்குள் சென்று சுமார் 48 மணி நேரம் வரை அங்கு உயிருடன் இருக்கும். அந்நேரத்திற்குள் சினை முட்டையுடன் சேர வில்லையெனில் விந்தணு செத்து மடிந்து போய்விடும்.

இந்த கருக்குழலின் மூன்றின் இறுதிப்பகுதி தூரத்தில்தான் விந்தணுவும், சினைமுட்டையும் ஒன்றிணைந்து கரு உருவாகுவதுதான் அதிகம். இக்குறிப்பிட்ட இடத்தை அடைவதற்கு முன்போ, அல்லது அந்த தூரத்தை கடந்த நிலையிலோ இரண்டு அணுக்களும் இணைந்து உருவானால் சென்றடைய வேண்டிய இடமான கர்ப்பப்பையை சென்றடைய முடியாமல் ஃபிலோபின் டியூப்குள்ளே கரு வளர்ந்து அதனால், அக்குழல் வெடித்து விடும் (Ectopic Pregnancy) அபாயம் உண்டு என்ற செய்தியையும் மீண்டும் நினைவு படுத்திக் கொண்டு, இந்நபி

மொழியை புரிந்து கொள்ள முனைவோம்.

ஃபிலோபின் டியூப்பின் (கருக்குழலின்) மூன்றின் ஒரு பகுதி தூரத்தில் தான் விந்தணுவும், சினை முட்டையும் சந்தித்து, கருத்தரிக்கிறது என்பது அறிவியல் கண்ட உண்மை. இக்குறிப்பிட்ட இடத்தை அடைவதில் எது முந்துகிறதோ அதன் அடிப்படையில்தான் சிசுவின் பாலினம் தீர்மானிக்கப் படுகிறது| என்பது நபிமொழியின் கருத்து.

இந்நபிமொழியில் கூறப்பட்டிருக்கும் முந்துதல் என்பது, உதாரணத்திற்கு விந்தணு 11வது நாள் கருவறைக்குள் செலுத்தப்பட்டு, சினை முட்டை 12வது நாள் அங்கு வந்தடைவது என்றும் எடுத்துக் கொள்ளலாம். அது போல் 12வது நாள் சினை முட்டை முந்தி வந்து சில மணி நேரங்கள் கழிந்த பின், விந்தணு அக்குறிப்பிட்ட இடத்திற்கு வந்தடைவதாகவும் எடுத்துக் கொள்ளலாம். இந்த இரு நிலையிலும் இரு அணுக்களும் இணைந்தாலும் குழந்தை உருவாக வாய்ப்புள்ளது. ஏனெனில் விந்தணு 48 மணி நேரமும், சினை முட்டை 24 மணி நேரமும் உயிர் வாழக்கூடியது என்பதை மேலே கண்டோம்.

இவ்வாறு கருவுறுவதுதான் நடைமுறையில் அதிகமும் கூட. காரணம் விந்தணுவும், சினைமுட்டையும் ஒரே சமயத்தில் அக்குறிப்பிட்ட இடத்தை வந்தடைவது மிகக் குறைவு. அதனால்தான் விந்தணுவும், சினை முட்டையும் முறையே 48, 24 மணி நேரங்கள் உயிர் வாழும் நிலையில் அவற்றை இறைவன் படைத்துள்ளான். இவ்வாறு ஒன்றையொன்று முந்தி பிந்தி வருவதால் சிசு ஆணாக, பெண்ணாக உருவாகுவதில் ஏதாவது தொடர்பு உள்ளதா? என அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்யும் போது அதனால் எந்தப் பாதிப்பும் இல்லை என்பதுதான் விடையாகக் கிடைக்கிறது. ஏனெனில் விந்தணுவிலுள்ள 46 குரோமோசோம்கள் 2210y, 2210x என இரு ஜோடிகளாகவும், சினைமுட்டையிலுள்ள 46 குரோமோசோம்கள், 2210x, 2210x என இரு ஜோடிகளாகவும் பிரிந்து இருக்கும். y. x என்பது முறையே ஆண், பெண் இனத்தைக் குறிக்கும் குரோமோசோம்களாகும். இந்தக் குரோமோசோம் சினைமுட்டையில் x, x என்ற பெண்ணினக் குரோமோசோமாகவும், விந்தணுவில் y, x என்ற ஆணினக் குரோமோசோம், பெண்ணினக் குரோமோசோம் என இருவேறு தன்மைகளிலும் இருக்கும் என்பதை நினைவு படுத்திக் கொள்ளவும்.)

இரண்டிரண்டு ஜோடிகளாக பிரிந்திருக்கும் குரோமோசோம்கள் எது, எந்த ஜோடியுடன் இணைகிறது என இணைவதின் அடிப்படையில்தான் பாலினம் தீர்மானிக்கப்படுகிறது. அதாவது, விந்தணுவிலுள்ள y என்ற ஆணினக் குரோமோசோமை உள்ளடக்கிய ஜோடி, சினைமுட்டையின் எந்த ஜோடியுடனும் சேர்ந்தாலும் சிசு ஆணாகவும், விந்தணுவின் x என்ற பெண்ணினக் குரோமோசோமை உள்ளடக்கிய ஜோடி, சினைமுட்டையின் எந்த ஜோடியுடன் இணைந்தாலும், சிசு பெண்ணாகவும் உருவாகிறது என்பதே அறிவியல் கண்ட உண்மை.

சினை முட்டை முந்திக் கொள்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போதும், அந்த சினை முட்டை விந்தணுவின் எந்த ஜோடியுடன் இணைகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் பாலினம் தீர்மானிக்கப்படுமே தவிர, விந்தணுவும், சினை முட்டையும் ஒன்றை ஒன்று முந்திக் கொள்வதால் பாலினத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது என்பதே நிரூபணம் செய்யப்பட்ட அறிவியல் உண்மை.

அவ்வாறெனில் மேற் கூறப்பட்ட நபிமொழியின் பொருளை எவ்வாறு புரிந்து கொள்வது? நபி மொழியில் தவறுதலாகக் கூறப்பட்டு விட்டது என்று எடுத்துக் கொள்ளலாமா?

ஆண் பேரித்த மரத்தின் கிளையையும், பெண் பேரித்த மரத்தின் கிளையையும் மகரந்த சேர்க்கைக்காக ஒன்றோடு ஒன்றை இணைத்துக் கட்டிக் கொண்டிருக்கும் பணியில் மதீனா வாசிகள் ஈடுபட்டிருப்பதை அறிந்த இறைத்தூதர் நபி(ஸல்) அவர்கள், இது அவசியமற்ற செயல், இதனால் எந்தப் பயனும் விளையப்போவதில்லை எனவே, இதனை தவிர்ந்து கொள்ளலாமே என அறிவுரை கூறினார்கள். இறைத்தூதரின் அறிவுரையை அறிந்த இப்பணியில் ஈடுபட்டிருந்த அனைத்து மதீனாவாசிகளும் அவ்வாண்டு மகரந்தச் சேர்க்கை செய்வதை விட்டு விட்டார்கள். அதனால் அவ்வருடம் பேரித்தம் பழ மகசூல் மிகப் பெரிய அளவில் பாதிப்படைந்து பதர்களாக மாறி, பன்மடங்கு குறைந்து விட்டது. இதனை நபி(ஸல்) அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்ற போது, என் அனுமானத்தின் அடிப்படையில்தான் அவ்வாறு கூறினேன், உங்களின் உலகியல் நடைமுறைகளை நீங்கள் புரிந்துள்ளபடி செயல்படுத்திக் கொள்ளுங்கள். மார்க்க விவகாரத்தில் நான் கூறியதை கட்டாயம் செயல்படுத்துங்கள் என்று கூறிய செய்தி முஸ்லிம், அஹ்மது, இப்னு மாஜா போன்ற நபிமொழித் தொகுப்புகளில் இடம் பெற்றுள்ளது.

இந்நபிமொழியின் வழிகாட்டலின் அடிப்படையில் கருயியல் குறித்து வந்திருக்கும் நபிமொழியின் பொருளை புரிந்து கொள்ளலாமா? அதாவது, அறிவியல் அறிவு இல்லாத காலத்தில் வாழ்ந்த இறைத்தூதர் நபி(ஸல்) அவர்கள் அனுமானத்தின் அடிப்படையில் கருயியல் பற்றிய இந்தச் செய்தியைக் கூறியுள்ளார்கள். நடைமுறைப்படுத்த வேண்டிய மார்க்கச் சட்டம் சார்ந்த செய்தியல்ல. குழந்தை உருவாகல் குறித்த அறிவியல் கருத்தாகும். எனவே, இது இன்றைய அறிவியல் கண்டு பிடிப்புக்கு மாற்றமாக உள்ளதால், இந்த நபிமொழியினை கருத்தில் கொள்ளத் தேவை இல்லை என்று கருதி இந்த நபிமொழியை ஒதுக்கி விடலாமா? என்றால் அதற்கும் சாத்தியம் இல்லை.

ஏனெனில், கருயியல் குறித்து வினாவை முன் வைத்த யூதர், இறைத்தூதர்கள் மட்டும் அறிந்துள்ள செய்தியை இவர் அறிந்துள்ளாரா? என்பதை கண்டறியும் சோதனை நோக்குடன் இறைத்தூதர் என்பதற்கான அளவுகோளாகக் கருதியே இக்கேள்வியை முன் வைத்தார். இந்த நபிமொழி உண்மைக்கு புறம்பானது என உறுதி செய்யப்படும் போது, இக்கருத்தைக் கூறியவர் இறைத் தூதர் இல்லை என்றாகிவிடும். ஆனால், இவ்வினாவை முன் வைத்த யூதரே இச்செய்தி உண்மையானது, இதனைக் கூறியவர் இறைத்தூதர்தான் என ஏற்றுக் கொண்டு விட்டார் என்ற செய்தி இத்தொடரின் இறுதியில் இடம் பெற்றிருக்கிறது. எனவே, நபி(ஸல்) அவர்கள் அறியாமல் கூறிவிட்டார்கள் என்ற இக்கருத்தினை ஏற்க முடியாது.

மேலும், இந்நபிமொழியின் இறுதியில் இந்த யூதர் என்னிடம் கேட்டது குறித்து எந்த விளக்கமும் சற்று முன்பு வரை தெரியாமல் இருந்தேன், சிறிது நேரத்திற்கு முன்புதான் இறைவனிடமிருந்து அதற்கான விளக்கம்

எனக்கு கிடைத்தது என்று இடம் பெற்றுள்ள இன்னொரு தகவலும் கருயியல் குறித்து நபி(ஸல்) அவர்கள் அறியாமல் கூறி விட்டார்கள் என்ற முடிவுக்கு வருவதற்கு தடையாக உள்ளது. ஏனெனில் இறைவன் அறிவித்த இந்தத் தகவல் நிச்சயமாக தவறாக இருக்கவே முடியாது.

அப்படியானால், அறிவிப்பாளரின் வரிசையில் இடம் பெற்றவர்களிடம் ஏதேனும் கோளாறு இருக்குமோ என ஆய்வு செய்ய முயற்சித்த போது அந்த துறை சார்ந்த அறிஞர்கள், இந்த நபிமொழி மிகச் சரியானதுதான், அறிவிப்பாளர்களின் வரிசையில் எவ்விதக் கோளாறும் இல்லை என உறுதி கூறியுள்ளார்கள்.

அப்படியானால் இந்த நபிமொழியை எவ்வாறு புரிந்து கொள்வது என மேலும் ஆய்வு செய்யும் நோக்குடன் சிந்தித்தோம். குர்ஆனுக்கு குர்ஆன் விளக்கமாக அமைந்திருப்பது போல, நபிமொழிக்கு நபிமொழி விளக்கமாக அமைகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு, கருயியல் குறித்து இடம் பெற்றிருக்கும் வேறு நபிமொழிகள் உள்ளனவா? என்று ஆராய்கிறோம். அதிலாவது இந்நபிமொழிக்கு விடை உள்ளதா? என்பதை இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் காண்போம்.

இன்ஷாஅல்லாஹ் தொடரும்...

# இனிய மாலை பொழுதினிலே...

- *நாஞ்சிலார்*

அல்ஹம்துலில்லாஹ், எல்லா புகழும் அல்லாஹ்விற்கே! கடந்த ஹிஜ்ரி 08-01-1431 (25, டிசம்பர் 2009) திகதி ஜித்தா செனாயிய்யாவிலுள்ள இஸ்லாமிய அழைப்பகமும், ஜித்தா தமிழ் தாஃவா கமிட்டியும், இணைந்து நடத்திய இஸ்லாமிய மாலை அமர்வில் சகோ. அபுல் அமான் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக, பல பயனுள்ள மார்க்க சொற்பொழிவுகளுடன் இனிதே நடைபெற்றது.

இதில் தலைமை உரையாக 'ஹிஜ்ரி ஆண்டு' என்ற தலைப்பில் சகோ. அபுல் அமான் அவர்களும், சிறப்பு சிற்றுரையாக 'காலம் பொன்னானது' என்ற தலைப்பில் மௌலவி யூசுப் மதனி அவர்களும், அன்றைய முக்கிய உரையான 'மூஸா(அலை) அவர்களும், ஆஷூரா நோன்பும்' என்ற தலைப்பில் மௌலவி இப்ராஹீம் மதனி அவர்களும், சிறப்பு சொற்பொழிவு உரையாக 'அல்லாஹ்வின் சோதனையும் படிப்பினையும்' என்ற தலைப்பில் மௌலவி அப்துல் மஜீத் ஸஹ்வி அவர்களும் உரை நிகழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் அன்புச்சகோதரர்கள், நண்பர்கள், பெரியோர்கள் மற்றும் தாய்மார்கள் என அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மார்க்க அறிஞர்கள் ஆற்றிய உரையை, பங்கு பெற இயலாத சகோதர-சகோதரிகள் பயன்பெறும் நோக்கத்தோடு எழுத்து வடிவமாக தொகுத்து வழங்குவதற்கு சுவனப்பாதை மாதஇதழ் பொறுப்பேற்று வழங்கியுள்ளது. பின்வரும் சொற்பொழிவின் தொகுப்பை படித்து பயன்பெற எல்லாம் வல்ல அல்லாஹ் உதவி செய்வானாக! இன்ஷா அல்லாஹ்

தலைமையுரை: ஹிஜ்ரி ஆண்டு (சகோ. அபுல் அமான்)

புத்தாண்டு? பிறந்துவிட்டால் எங்கு பார்த்தாலும் Happy New Year, அப்பப்பா! போதும் போதும், நாவு கூசும் அளவிற்கு அனாச்சாரங்களும், அக்கிரமங்களும் நடந்தேறுகிறது, கேடுகெட்ட சமுதாயமாகிவிட்டது இந்த உலகம், உலகத்தை ஆளும் பகுத்தறிவாதி? தலைவர்களின் அங்கிகாரத்துடன் நடைபெறுகிறது இந்த கேலிக்கூத்து, மனித சமுதாயம் தன் நாகரீகத்தை இழந்து இதுதான் நவநாகரீகம் என்று எண்ணிக்கொண்டு மதுவிலும், விபசாரத்திலும், இன்னும் ஏதேதோ நாகரீகம் என்ற பெயரால் புதிது புதிதாய் ஒவ்வொரு வருடமும் நடந்தேறுகிறது, காட்டுமிராண்டி சமுதாயமாகிய 'அய்யாமுல் ஜாஹிலீய்யா'வை மிஞ்சும் அளவிற்கு இந்த உலகம் கெட்டு விட்டதே! என்று ஒவ்வொரு நல்ல மனித உள்ளமும் எண்ணுகிறது.

இறைவன், அவனால் படைக்கப்பட்ட மக்கள் இப்பூமியில் சுபிட்ச்சமாக வாழ்வதற்காக மிக அழகான சட்ட திட்டங்களை, அல்லாஹ், தன் தூதர்கள் மூலம் நிலைபெற செய்கின்றான். அச்சட்டத்தை பின்பற்றி நடப்பவர்களுக்கு, இம்மை வாழ்வில் முழு நிம்மதியும், மன அமைதியும் கிடைக்கிறது மறுமை வாழ்வில் மகத்தான வெற்றியையும் எல்லாம் வல்ல அல்லாஹ் வழங்குகின்றான். அதேபோல் அச்சட்டத்தை புறந்தள்ளி, தான்தோன்றித்தனமாக எல்லை மீறி இப்படியான புத்தாண்டாகட்டும் அல்லது இது போன்று மற்ற எதுவாகட்டும் மனிதன் ஷைத்தானியத்தை அப்படியே தோலுரித்துக்காட்டுகிறான், இப்படிப்பட்டவர்களுக்கு மறுமையில் அல்லாஹ் மிக கடுமையான வேதனையை வழங்குவான் இம்மை வாழ்வில் மானமரியாதை இழந்து நிம்மதியற்றவர்களாக வாழக்கூடும்.

இவ்வுலகிற்கு அருள்கொடையாக வந்த எம்பெருமானார் முஹம்மது ரசூல்(ஸல்) அவர்கள் இதைப்போன்ற தரம் தாழ்ந்த செயல்கள் அனைத்தையும் தன் காலடியில் போட்டு மிதித்து, தூய சமுதாயமாக ஆக்கிச்சென்றார்கள். ஏக இறைவன் ஒருவன், அவனின் தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் தான் என்ற கொள்கையை நிலை நாட்ட நபிகளார் (ஸல்) அவர்கள் பட்ட கஷ்டங்கள் ஏராளம் ஏராளம், இஸ்லாத்தை நிலைநாட்டவும், தூய சமுதாயத்தை உருவாக்கவும், 50 ஆண்டுகள் வாழ்ந்த மண்ணை விட்டு ஹிஜ்ரத் என்னும் புனித பயணத்தை அல்லாஹ்வின் உத்தரவின்படி மேற்கொண்டார்கள். இந்த ஹிஜ்ரத் பயணம் தான் இஸ்லாத்திற்கு ஒரு மைல் கல்லாகவும், இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தை உருவாக்க உறுதுணையாகவும் திகழ்ந்தது.

இஸ்லாத்திற்காக மக்காவிலிருந்து மதீனாவிற்கு புலம்பியர்ந்த ஹிஜ்ரத் என்னும் புனிதப்பயண நிகழ்வு, ஸஹாபாக்களின் வாழ்வில் நீங்காத நினைவை ஏற்படுத்தியது. ரசூல்(ஸல்) காலத்திற்குப்பின் பல பெரும் பொறுப்புக்குள்ளான ஸஹாபாக்களின் ஆட்சி காலத்தில் இஸ்லாத்திற்காக பல சீர்திருத்தங்களை

கொண்டு வருவதற்கு கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது, இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் இந்த ஹிஜ்ரி ஆண்டு, அக்காலத்தில் சூரிய கணக்கியல் ஆண்டு, யானை ஆண்டு இன்னும் சில ஆண்டுகளும் புழக்கத்தில் இருந்தது இவை அனைத்தும் பிறை கணக்கின் அடிப்படை இல்லாமலும் ,அல்லாஹ் வழங்கிய புனித மாதங்களின் அடிப்படை இல்லாமலும் இருந்த காரணத்தால், இஸ்லாத்திற்காக ஒரு ஆண்டை உருவாக்க ஸஹாபாக்கள் முயன்றனர், எனவே பிறை, மற்றும் அல்லாஹ் வழங்கிய பிரசித்தப்பட்ட புனித மாதங்களின் அடிப்படையில், கலீஃபா உமர்(ரலி) அவர்களின் காலத்தில் உருவாக்கப்பட்டு, அதன் முதல் ஆண்டை மக்காவிலிருந்து மதீனாவிற்கு புலம்பெயர்ந்த ஹிஜ்ரத் என்னும் புனிதப்பயண நிகழ்வை முன் வைத்து அன்றிலிருந்து முதல் ஆண்டாகவும், ஹிஜ்ரத்தை நினைவு கொள்ளும் முகமாக அவ்வாண்டுக்கு ஹிஜ்ரி ஆண்டு என்று பெயரும் சூட்டினார்கள்.

(நபியே! தேய்ந்து, வளரும்) பிறைகள் பற்றி உம்மிடம் கேட்கிறார்கள்; நீர் கூறும்: அவை மக்களுக்குக் காலம் காட்டுபவையாகவும், ஹஜ்ஜையும் அறிவிப்பவையாகவும் உள்ளன. (அல்குர்ஆன் 2:189)

நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அல்லாஹ்வுடைய (பதிவுப்) புத்தகத்தில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும் - அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவை இது தான் நேரான மார்க்கமாகும் - ஆகவே அம்மாதங்களில் (போர் செய்து) உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள். (அல்குர்ஆன் 9:36)

மனிதன் கணக்கிட்டு வாழ்ந்திட மிக அற்புதமான மாதங்களின் கணக்கியல் தத்துவத்தை அறிமுகப்படுத்தியது இஸ்லாம் தான், இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தில் மிகவும் பொடு போக்காக இருக்கின்றோமே என்பது மிகவும் வேதனைக்குரியது, அதிலும் குறிப்பாக முஸ்லீம் என்று மார்தட்டித்திரியும் மைனர்கள் பெரும்பாலோர், இஸ்லாம் கடந்து வந்த பாதையும் மறந்து தன் சொந்த சரித்திரத்தையும், மறந்து மாற்றுக்கலாச்சாரத்தின் மடியில் தவிழ்கின்றனர், நன்மையை ஏவி தீமையை தடுப்பதுதான் மார்க்கம் நமக்கு வழங்கிய பொது விதி, ஆனால் நம்மில் பெரும்பாலானோர் நன்மையும் செய்வதில்லை, தீமையையும் தடுப்பதில்லை ஆக அல்லாஹ்வின் தண்டனைக்கு இச்சமுதாயம் மிக தகுதியுடையது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை

விரைவில் குழப்பங்களில் சில வகைகள் தோன்றும், அப்போது அவற்றுக்கிடையே (மௌனமாக) அமர்ந்திருப்பவன் (அவற்றுக்காக) எழுந்து நிற்பனைவிடவும், அவற்றுக்கிடையே எழுந்து நிற்பவன் நடப்பவனை விடவும், அவற்றுக்கிடையே நடப்பவன் (அவற்றை நோக்கி) ஓடுபவனைவிடவும் சிறந்தவன் ஆவான். அதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறவரை அவை அழிக்க முற்படும். அப்போது ஒரு புகலிடத்தையோ, காப்பிடத்தையோ பெறுகிறவர் அதன் வாயிலாகத் தம்மைத் தற்காத்துக் கொள்ளட்டும் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்கள்.

எல்லாம் வல்ல இறைவனின் கட்டளைக்கும், நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை வழிகாட்டுதலுக்கும் மாறு செய்ய நடக்கத்தூண்டும் இப்படிப்பட்ட கேடான செயல்களிலிருந்து நம் அனைவரையும் அல்லாஹ் பாதுகாப்பானாக!

# கருவைப் பாதிக்கும் தாயின் அழகுசாதனப் பொருட்கள்

இன்றைய வணிக உலகம் எல்லோரையும் அமிலக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறதோ என்று தோன்றுகிறது. புற்றீசல் போலக் கிளம்பும் அழகுசாதனப் பொருட்கள் கருவிலிருக்கும் குழந்தையையே பாதிப்படைய வைக்கிறது எனும் அதிர்ச்சிகரமான ஆராய்ச்சி முடிவு ஒன்றை வெளியிட்டுள்ளனர் ஸ்காட்லாந்திலுள்ள எடின்பரா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

எல்லோரையும் போலவே தாய்மை நிலையிலிருக்கும் பெண்களும் கிரீம்களும், ஃபெர்பியூம்களும் பயன்படுத்துவது நாம் அறிந்ததே. ஊடகங்களும் தேவையற்ற பல பொருட்களை 'தாயின் அத்தியாவசியத் தேவை ' எனக் கூவிக் கூவி விற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அது தாய் தன்னை அறியாமலேயே தன் குழந்தைக்கு வழங்கும் நோய் என்பதை இந்த ஆய்வு வருத்தத்துடன் சொல்கிறது.

அதிலும் குறிப்பாக கருவில் இருக்கும் குழந்தை ஆணாய் இருந்தால் அந்தக் குழந்தைக்கு பிற்காலத்தில் ஆண்மைக் குறைவு, குறைந்த உயிரணுக்கள் எண்ணிக்கை போன்ற சிக்கல்கள் வருவதற்கு வாய்ப்பு அதிகமாம்.

எட்டு வாரம் முதல் பன்னிரண்டு வாரம் வரையிலான தாய்மைக் காலத்தில் கருவிலிருக்கும் குழந்தைகளின் இனப்பெருக்க உறுப்புகள் உருவாகின்றன. சில ஹார்மோன்கள் இந்த கால கட்டத்தில் தூண்டப்பட்டு ஆண் குழந்தைகளின் இனப்பெருக்க உறுப்புகளுக்கான அடித்தளத்தை அமைக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் தாய் பயன்படுத்தும் அழகுப் பொருட்கள் குழந்தையின் ஹார்மோன் தூண்டுதலைத் தடை செய்கின்றன.

டெஸ்டோஸ்ரோன் எனும் ஒரு குறிப்பிட்ட ஹார்மோன் ஆண்களின் இனப்பெருக்க வளர்ச்சிக்கு பெரிதும் தேவையானது. அதன் மீது இந்த அழகு சாதனப் பொருட்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இப்படியெல்லாம் பட்டியலிட்டு தாய்மை நிலையில் இருக்கும் பெண்களுக்கு அதிர்ச்சி ஏற்படுத்துகின்றார் இந்த ஆராய்ச்சியை முன்னின்று நடத்திய பேராசிரியர் ரிச்சர்ட் ஷார்ப் என்பவர்.

இந்த அமிலங்களால் புற்று நோய் வரும் வாய்ப்பு கூட இருப்பதாக அவர் அச்சம் தெரிவிக்கின்றார். எனவே தாய்மை நிலையில் இருக்கும் பெண்கள் அழகு சாதனப் பொருட்களை அறவே தவிர்ப்பதே நல்லது என அவர் வலியுறுத்துகின்றார்.

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 6:5

### போட்டிக்குரிய கேள்விகள்

**1. இவர்களுக்கு மிகவும் சிரமமான தொழுகை இஷாவும் ஃபஜ்ருமாகும் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்**

a. முனாபிக்குகளுக்கு b. முஸ்லிம்களுக்கு

c. முஃமின்களுக்கு

**2. ஐந்து நேரத் தொழுகைகளில் யாருக்கு இந்த தொழுகை தவறிவிட்டதோ, அவன் குடும்பமும் சொத்துக்களும் அழிக்கப்பட்டவனைப் போன்று இருக்கிறான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்**

a. பஜர் தொழுகை b. மஃரிப் தொழுகை

c. அஸர் தொழுகை

**3. அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயல் எது? என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்டபோது, முதலில் கூறிய பதில் யாது?**

a. பெற்றோருக்கு நன்மை செய்தல்

b. தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுதல்

c. இறைவழியில் அறப்போர் புரிதல்

**4. அல்லாஹ்வின் திருமுகத்தை நாடி பள்ளிவாசல் ஒன்றைக் கட்டியவருக்குக் கிடைக்கும் வெகுமதி எது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்**

a. அது போன்ற ஒன்றை இவ்வுலகத்தில் அவருக்காக அல்லாஹ் கொடுக்கிறான்

b. அது போன்ற ஒன்றைச் சுவர்க்கத்தில் அவருக்காக அல்லாஹ் கொடுக்கிறான்

c. அவரின் வாழ்க்கையில் அதிக செல்வங்களை வழங்குகிறான்

**5. நடுத் தொழுகையை பாதுகாத்துக் கொள்ளுங்கள் என அல்லாஹ் கூறும் நடுத் தொழுகை எது?**

a. அஸர் தொழுகை b. ஃபஜ்ர் தொழுகை

c. இஷா தொழுகை

**அறிவுப் போட்டி - 6:4 க்கான பரிசு பெறுபவர் : முஹம்மத் சபீர் (0509776519)**

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

### விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக

   Abdullah, AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

### அறிவுப் போட்டி - 6:4 க்கான விடைகள்

1) a) லாஇலாஹ இல்லல்லாஹ் எனும் கூற்றாகும்

2) c) முஹர்ரம் 9 மற்றும் 10

3) b) சிலந்திப் பூச்சி

4) b) இப்றாஹிம்(அலை)

5) a) முஹர்ரம் 10

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 33 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

اَللَّهُمَّ إِنِّي أَسْأَلُكُ الرِّضَى بَعْدَ الْقَضَاء وَبَرْدَ الْعَيْش بَعْدَ الْمَـوْتِ وَلَذَّةَ النَّظَر فِي وَجْهك الْكَرِيم وَشَوْقًا إِلَى لِقَائك مِنْ غَيْرِ ضَـرَّاء مُضِرَّةٍ وَلا فِتْنَةٍ مُضِلَّةٍ ، أَعُوذُ بك اللَّهُمَّ أَنْ أَظْلِمَ أَوْ أُظْلَـمَ أَوْ أَعْتَدِيَ أَوْ يُعْتَدَى عَلَيَّ أَوْ أَكْسَبَ خَطِيئَةً مُخْطِئَةً أَوْ ذَنْبًا لا يُغْفَرُ.

(المعجم الكبير للطبراني)

**பொருள்:** யா அல்லாஹ்! விதியை பொருந்திக் கொள்ளும் தன்மையையும் மரணத்திற்குப் பின் குளிர்ந்த (சொர்க்க) வாழ்வையும், வழிகெடுக்கும் குழப்பத்திலும் தீய விளைவைத்தரும் செயலிலும் ஈடுபட்டுவிடாது உன்னைச் சந்திப்பதின் ஆசையையும் உன் திருமுகத்தைப் பார்ப்பதில் அடையும் பேரின்பத்தையும் நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன். நான் யாருக்கும் அநியாயம் செய்வதிலிருந்தும் அல்லது யாராவது எனக்கு அநியாயம் செய்வதிலிருந்தும் அல்லது நான் அத்துமீறுவதிலிருந்தும் அல்லது யாராவது என்மீது அத்துமீறுவதிலிருந்தும் அல்லது மன்னிக்கப்படாத தவறு மற்றும் பாவத்திலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். (தப்ரானி)